# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 2, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வாட்ஸ்ஆப்பில் அறிமுகமாக இருக்கும் 'யூஸர்நேம்' வசதி குறித்து விளக்கம் கேட்டு, அதன் தாய் நிறுவனமான மெட்டாவுக்கு மத்திய அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

   i. உலகின் முன்னணி தகவல் தொடர்பு செயலியான வாட்ஸ் ஆப்பை, இந்தியாவில் சுமார் 50 கோடி பேர் தற்போது பயன்படுத்தி வருகின்றனர். தற்போது வாட்ஸ்ஆப்பில் ஒருவர் இன்னொருவரிடம் தகவல் பரிமாறுகையில், பயனர்களின் செல்போன் எண்ணை பரஸ்பரம் அறிய முடியும். ஆனால், இதற்கு மாற்றாக கைப்பேசி எண்களைப் பகிராமலேயே யூஸர்நேம் மூலம் தகவல் பரிமாறும் வசதியை வாட்ஸ்ஆப் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

   ii. இதுகுறித்து வாட்ஸ் ஆப் நிறுவனம் வெளியிட்ட பதிவில், பயனர் ளின் தனிநபர் விவரங்களைப் பாதுகாக்கும் நோக்கில், குழு தகவல் பரிமாற்றம் அல்லது புதிய பயனர்களிடம் உரையாடுதல் உள்ளிட்டவற்றின்போது கைப்பேசி எண்ணைப் பகிராமலேயே யூஸர்நேம் அடிப்படையில் பயனர்கள் தகவலைப் பரிமாறும் வசதியை இந்தாண்டு இறுதியில் அறிமுகப்படுத்த இருப்பதாகவும், இந்த வாரம் முதல் யூஸர்நேம் முன்பதிவு தொடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

   iii. இந்தப் புதிய வசதி குறித்து, மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது:

      - இந்த வசதி, போலிக் கணக்கு மற்றும் மோசடிக்கு வழிவகுக்கக்கூடும். மக்களின் பாதுகாப்பிலும், சமூகத்திலும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்திவிடக்கூடும். தேசப் பாதுகாப்பு அல்லது மக்களின் பாதுகாப்பு விஷயத்தில் மத்திய அரசு ஒரு போதும் சமரசம் செய்யாது. ஆதலால் வாட்ஸ்ஆப்பின் திட்டத்தை மத்திய அரசு ஆய்வு செய்து வருகிறது.
      - அந்த வசதியில் உள்ள அம்சங்கள் குறித்த முழு விவரங்களை கேட்டு வாட்ஸ்ஆப்புக்கு நோட்டீஸ் அனுப்பும் திட்டமும் உள்ளது. அதே போல சட்ட அமலாக்க அமைப்புகளும், இதை ஆய்வு செய்யும்.
      - வாட்ஸ்ஆப்பின் பதில் திருப்திகரமாக இல்லையெனில், அதை செயல்படுத்த வேண்டாம் என மத்திய அரசு வலியுறுத்தும். வாட்ஸ்ஆப் நிறுவனம் தரப்பில் நமது கவலைகளுக்கு தீர்வு காணும் வகையில் பதில் அளிக்கப்பட வேண்டும். இல்லையெனில் அந்த வசதியை வாட்ஸ்ஆப்பால் (இந்தியாவில்) செயல்படுத்த முடியாது என்று தெரிவித்தனர்.

2. 'நாட்டின் இறையாண்மை மற்றும் வளர்ச்சி நலன்களைப் பாதுகாப்பதற்காக

ராணுவத்தின் திறன்களை உலகத் தரத்துக்கு விரைவாக நவீனமயமாக்க வேண்டும்' என்று சீன அதிபர் ஷி ஜின்பிங் வலியுறுத்தினார் சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் 105-ஆவது ஆண்டு விழா கூட்டத்தில் உரையாற்றிய அதிபர் ஷி ஜின்பிங் மேலும் கூறியதாவது:

(i) அடுத்தாண்டு வரும் சீன ராணுவத்தின் நூற்றாண்டு இலக்குகளை எட்டும் வகையில், அமெரிக்க ராணுவத்துக்கு இணையான நவீன ஆயுதங்கள், தொழில்நுட்பத் தளவாடங்கள் மற்றும் போர்ப் பயிற்சிகளுடன் நாட்டின் முப்படைகளையும் தரம் உயர்த்த வேண்டும்.

(ii) தைவானை சீனாவுடன் இணைப்பது கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றுப் பணி. இதில் எவ்வித சமரசமும் இல்லை. தைவானைத் தனி நாடாகப் பிரிக்க முயலும் பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராகவும், சர்வதேச நாடுகளின் அத்துமீறிய தலையீடுகளுக்கு எதிராகவும் சீனா கடும் நடவடிக்கைகளை எடுக்கும். 'ஒரே சீனா' கொள்கையின் அடிப்படையில் தேசிய மறுஇணைப்பு நிச்சயம் சாத்தியமாக்கப்படும்.

(iii) கடந்த 1921-இல், வறுமை மற்றும் வெளிநாட்டு ஆதிக்கத்துக்கு மத்தியில் வெறும் 50 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சி, தற்போது 10 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டு உலகின் மிகப் பெரிய ஆளுங்கட்சியாக பெரும் செல்வாக்குடன் உருவெடுத்துள்ளது.

(iv) ஷி ஜின்பிங் கடந்த 2012-இல் அதிபராக பதவியேற்றது முதல் உயர் நிலை ராணுவத் தளபதிகள் உள்பட 10 லட்சத்துக்கும் அதிகமான அரசு அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(v) சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனரான மாவோ சேதுங்குக்குப் பிறகு, 2 ஐந்து ஆண்டு கால வரம்பைத் தாண்டி 3-ஆவது முறையாக தற்போதும் பதவியில் நீடிக்கும் ஒரே தலைவராக ஷி ஜின்பிங் விளங்குகிறார்.

(vi) இச்சூழலில், அடுத்த ஆண்டு கட்சியின் 5 நடைபெறவுள்ள ஆண்டு மாநாட்டுக்குத் தயாராகும் வகையில் இந்த உரை அமைந்துள்ளதாகவும், இதன்மூலம், அவர் 4-ஆவது முறையாகவும் அதிபர் பதவியைத் தொடர முழு வாய்ப்புள்ளதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

3. அதானி குழுமத்தின் அங்கமான அதானி கிரீன் எனர்ஜி, சுற்றுச்சூழலைப் பாதிக்காத புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியில் 20 கிகாவாட் என்ற மாபெரும் இலக்கைக் கடந்து புதிய சாதனை படைத்துள்ளது.

i. இந்தியாவில் இதன்மூலம், இந்த மைல்கல்லை எட்டிய முதல் தூய்மை மின் உற்பத்தி

நிறுவனம் என்ற பெருமையை அதானி கிரீன் பெற்றுள்ளது. முழுவதும் புதிய திட்டங்கள் மூலமாகவே இந்த இமாலய சாதனை எட்டப்பட்டுள்ளது கூடுதல் சிறப்பம்சமாகும்.

ii. அதானி கிரீன் நிறுவனம் தனது முதல் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திட்டத்தை தமிழகத்தின் கமுதியில் கடந்த 2016-இல் தொடங்கியது.

iii. அடுத்த 10 ஆண்டுகளுக்குள் இந்த 20 கிகாவாட் திறன் எட்டப்பட்டுள்ளது. இதில் 14.2 கிகாவாட் சூரிய மின்சாரமும், 2.7 கிகாவாட் காற்றாலை மின்சாரமும், 3.3 ஜிகாவாட் சூரிய-காற்றாலை கலப்பின மின்சாரத் திட்டங்களும் அடங்கும்.

iv. கடந்த 2025-26 நிதியாண்டில் மட்டும் இந்நிறுவனம் 5,051 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தி திறனைப் புதிதாக தனது கட்டமைப்பில் இணைத்துள்ளது.

v. உலக அளவில் சீனாவைத் தவிர்த்துப் பார்த்தால், ஒரு நிறுவனம் ஒரே ஆண்டில் அதிகரித்த மிக கூடுதல் மின் உற்பத்தித் திறன் இதுவேஆகும்.

vi. அதானி கிரீன் நிறுவனம் இப்போது ஆண்டுக்கு 5,200 கோடி யூனிட்டுகளுக்கும் அதிகமான தூய்மையான மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகிறது. இது இந்தியாவின் மொத்த மின்சார பயன்பாட்டில் சுமார் 3 சதவீதம் ஆகும்.

4. டுராண்ட் கோப்பை என்பது கால்பந்தாட்டத்துடன் தொடர்புடைய ஒரு போட்டியாகும்.

5. நாடு முழுவதும் வாகன விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க ஒரே மாதிரியான நடைமுறையை பின்பற்றுவதற்கான வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் வெளியிட்டது.

i. வாகன விபத்தில் உயிரிழந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்களின் ஆண்டு வருமானத்தை அவர்கள் தாக்கல் செய்த வருமான வரி கணக்கின் அடிப்படையில் கணக்கிட்டு நிவாரணத்தொகையை நீதி மன்றங்கள் எவ்வாறு நிர்ணயிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ii. ஒடிஸா மாநிலத்தில் வாகன விபத்தில் உயிரிழந்த கட்டுமானத் தொழிலதிபரான மனோரஞ்சன் பாண்டே (39) குடும்பத்தினர் அவருக்கு ஸ்ரீராம் பொது காப்பீட்டு நிறுவனம் நிர்ணயித்த நிவாரணத் தொகையை எதிர்த்து நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். ரஷ்மிரேகா திரிபாதி வழக்கு எனக் கூறப்படும் இந்த வழக்கின் இறுதியில் அவரது ஆண்டு வருமானத்தை ரூ.13.33 லட்சமாக நிர்ணயித்து ரூ.1.87 கோடியை நிவாரணமாக ஒடிஸா உயர்நீதிமன்றம் நிர்ணயித்தது. இதை எதிர்த்து மனோரஞ்சன் பாண்டே குடும்பத்தினர் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இந்த வழக்கை உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் கரோல் மற்றும்

என்.கோடீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து தீர்ப்பளித்தது.

iii. தீர்ப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

- வாகன விபத்தில் உயிரிழந்தவர்களின் ஆண்டு வருமானத்தை கணக்கிட மிகக் கடினமான மற்றும் விரைவான நடைமுறைகள் என ஏதுமில்லை. உயிரிழந்தவர்களின் ஆண்டு வருமானத்தை கணக்கிடுவதில் முக்கிய ஆவணமாக வருமான வரிக் கணக்கு திகழ்கிறது. அதனடிப்படையில் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் நிவாரணம் நிர்ணயிக்கப்படுகிறது.

iv. ஊதியம் பெறுவோர்-சுயதொழில் செய்வோர் வகைப்பாடு:

- விபத்தில் உயிரிழப்பவர் ஊதியம் பெறுபவராக இருப்பின் அவர் தாக்கல் செய்த முந்தைய ஆண்டின் வருமான வரி கணக்கு அடிப்படையில் ஆண்டு வருமானத்தை எடுத்துக்கொள்வது போதுமானது. பதவி உயர்வால் ஏற்படும் நிதி தாக்கத்தை கருத்தில் கொண்டே முந்தைய ஆண்டின் வருமான வரி கணக்கை எடுத்துக்கொள்ளுமாறு கூறுகிறோம்.
- ஒருவேளை விபத்தில் உயிரிழப்பவர் சுயதொழிலில் ஈடுபவர் அல்லது தொழிலதிபராக இருந்தால் அவர் உயிரிழப்பதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரிக் கணக்கின் சராசரியை ஆண்டு வருமானமாக எடுத்துக்கொள்ளலாம். சுயதொழில் மற்றும் வணிகத்தில் கிடைக்கும் வருமானத்தில் ஆண்டுக்கு ஆண்டு வேறுபாடுகள் இருக்கலாம் என்பதால் இந்த நடைமுறையை பின்பற்றுவது சரியாக இருக்கும்.
- இந்த அளவுகோல்களின் அடிப்படையில் தற்போதைய வழக்கில் விபத்தில் உயிரிழந்தவரின் ஆண்டு வருமானம் ரூ.14 லட்சமாக எடுத்துக்கொள்ளப்பட்டு நிவாரணத் தொகை ரூ.1.97 கோடியாக அதிகரிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

6. அமெரிக்காவின் நியூயார்க்கில் வரும் சனிக்கிழமை (ஜூலை 4) நடைபெற உள்ள அந்நாட்டின் 250-ஆவது சுதந்திர தின கொண்டாட்ட அணிவகுப்பில் பங்கேற்பதற்காக, மேரிலேண்ட் மாகாணம் பால்டிமோர் துறைமுகத்திலிருந்து நியூயார்க் துறைமுகம் நோக்கி புறப்பட்ட இந்திய கடற்படையின் பிரம்மாண்ட பாய்மர பயிற்சிக் கப்பலான ஐஎன்எஸ் சுதர்சினி.

i. 'லோகாயன் 26' என்ற பெயரில் கொச்சியில் இருந்து இந்த ஆண்டு தொடக்கத்தில் உலகம் சுற்றும் பயணத்தை இக்கப்பல் தொடங்கியது. 22,000 கடல் மைல்களுக்கு மேல் பயணித்து, 10-க்கும் மேற்பட்ட நாடுகளின் துறைமுகங்களுக்கு சென்றுவிட்டு நாடுதிரும்ப உள்ளது.

7. கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள விழிஞ்ஞம் துறைமுகத்தை இயக்கும் அதானி விழிஞ்ஞம் போர்ட் பிரைவேட் லிமிடெட் (ஏவிபிபிஎல்) நிறுவனத்தின் 49 சதவீத பங்குகளை, ஸ்விட்சர்லாந்தின் மெடிட்டரேனியன் ஷிப்பிங் கம்பெனி (எம்எஸ்சி) கையகப்படுத்துவது குறித்து மாநில அரசுக்கு முறைப்படி தகவல் அளிக்கப்படவில்லை என்று முதல்வர் வி.டி. சதீசன் தெரிவித்துள்ளார்.

i. ஏவிபிபிஎல் நிறுவனத்தின் 49 சதவீத பங்கை சுமார் 1.4 பில்லியன் டாலருக்கு (சுமார் ரூ.13,330 கோடி) உலகின் மிகப் பெரிய கப்பல் போக்குவரத்துக் குழுமமான எம்எஸ்சி நிறுவனம் கையகப்படுத்த உள்ளதாக, அதானி குழுமத்தின் கீழ் செயல்படும் அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம் (ஏபிஎஸ்இஇசட்) அறிவித்தது.

ii. இந்த விவகாரம் மாநில சட்டப் பேரவையில் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து முதல்வர் வி.டி.சதீசன் கூறியதாவது:

- ஏவிபிபிஎல்-இல்எம்எஸ்சி நிறுவனம் 49 சதவீத பங்குகளைக் கையகப்படுத்துவது குறித்து ஊடகத்தில் தகவல் வெளியானது.
- ஆனால், அதுகுறித்து அதிகாரபூர்வ ஆலோசனை நடத்தவோ, அதற்கான ஒப்புதலைப் பெறவோ மாநில அரசை அதானி குழுமம் அணுகவில்லை.
- விழிஞ்ஞம் துறைமுகத்தைக் கட்டி, இயக்கும் உரிமையை அதானி குழுமத்துக்கு அளித்து கேரள அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது. விழிஞ்ஞம் துறை முகதிட்டத்தில் மாநில அரசும் பங்குதாரராக உள்ள நிலையில், அந்த ஒப்பந்தத்தின்படி துறைமுகத்தின் முழு உரிமையும் 2080- ஆம் ஆண்டு கேரள அரசுக்கு மாற்றப்பட வேண்டும்.

iii. மாநில அரசின் ஒப்புதலின்றி செய்ய முடியாது:

- கம்பெனிகள் சட்டத்தின்படி, 25 சதவீதத்துக்கும் அதிகமான பங்கு பரிமாற்றம் என்பது நிறுவனத்தின் உரிமையாளரை மாற்றுவதாகும். இத்தகைய நடவடிக்கையை விழிஞ்ஞம் துறைமுக விவகாரத்தில் மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல் செய்ய முடியாது.
- இதுகுறித்த திட்ட முன்மொழிவு மாநில அரசுக்கு இதுவரை வரவில்லை. அந்த முன்மொழிவு வந்த பின், அது ஆராயப்படும் என்று தெரிவித்தார்.

8. இந்தியாவுக்கு தேயிலை ஏற்றுமதி செய்வதை மீண்டும் தொடங்கியுள்ளதாக நேபாள வெளியுறவு அமைச்சர் சிஷீர் கனால் தெரிவித்தார்.

i. இந்திய தேயிலை வாரியம் விதித்த கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக கடந்த

மே 1-ஆம் தேதி முதல் நேபாளத்தில் இருந்து இந்தியாவுக்கு தேயிலை வருவது நிறுத்தப்பட்டது. இந்நிலையில் இந்திய அரசு கட்டுப்பாடுகளை தளர்த்தியதால் நேபாளம் மீண்டும் ஏற்றுமதியைத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அமைச்சர் சிஷீர் கனால் மேலும் கூறியதாவது:

- இந்தியாவுக்கு மீண்டும் தேயிலை ஏற்றுமதியைத் தொடங்கியுள்ளோம். நேபாள தேயிலை ஏற்றுமதி குறித்த தனது கொள்கையை இந்தியா மறுபரிசீலனை செய்து மாற்றிக் கொண்டது. இது தொடர்பாக எனது இந்தியப் பயணத்தின் போது அந்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியதன் மூலம் சாத்தியமானது. நேபாள தேயிலைக்கு முக்கியச் சந்தையாக இந்தியா திகழ்கிறது என்றார்.
- நேபாளத்தில் உற்பத்தியாகும் பாரம்பரிய தேயிலையில் 90 சதவீதம் அளவுக்கு அண்டை நாடான இந்தியாவுக்கு ஏற்றுமதியாகிறது. மீதமுள்ள சுமார் 10 சதவீதமே பிற நாடுகளுக்குச் செல்கிறது.